பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

**08 09 2026** **TUESDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. இந்தியா உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. மத்திய பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இலங்கை சென்றடைந்தார்.

3. நாட்டில், ஆயிரத்து **86** லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கரீஃப் பருவ சாகுபடி நடைபெற்று வருவதாக மத்திய வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

4. இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் எஃகு, அலுமினியம், போன்ற பொருட்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரி விலக்கு அளிக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

5. வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Rounak Chouhan** இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

- - இனி விரிவான செய்திகள் - -

<<<<<>>>>>>

இந்தியா உலகளாவிய உற்பத்தி மையமாக உருவெடுத்துள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

குஜராத்தில் சரக்கு ரயில் போக்குவரத்து வழித்தடங்களை திறந்து வைத்து பேசிய அவர், இந்தியா தற்போது நவீன அதிவேக ரயில் பெட்டிகளையும், மெட்ரோ ரயில் பெட்டிகளையும் உள்நாட்டிலேயே தயாரித்து வருவதாக கூறியுள்ளார்.

50 ஆயிரம் நவீன ரயில் பெட்டிகளும், இரண்டரை லட்சம் சரக்கு ரயில் பெட்டிகளும் ரயில்வேயில் இணைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் சுட்டிக்காட்டினார்.

உள்நாட்டு உற்பத்தியை ஊக்குவிக்கும் வகையில், இந்த ரயில் பெட்டிகள் இந்தியாவிலேயே தயாரிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

சரக்கு ரயில் போக்குவரத்துக்கான தனி வழித்தடம் மூலம், இந்தியாவின் சரக்கு போக்குவரத்து மேம்படுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

கிழக்கு மற்றும் மேற்கு சரக்கு தனி ரயில் வழித்தடங்களில் 430-க்கும் மேற்பட்ட சரக்கு ரயில்கள் நாள்தோறும் இயக்கப்பட்டு வருவதாக திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

<<<<<>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, குஜராத் **Ekta** நகரில் வரும் **22-**ஆம் தேதி நடைபெறும் விழாவில், **72-**ஆவது தேசிய திரைப்பட விருதுகளை வழங்குகிறார்.

மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், **Article — 370** திரைப்படத்திற்கு சிறந்த திரைப்பட விருது வழங்கப்பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரமயுகம் திரைப்படத்தில் நடித்த மம்முட்டிக்கும், **Chandu Champion** திரைப்படத்தில் நடித்த கார்த்திக் ஆரியனுக்கும் சிறந்த நடிகருக்கான விருது வழங்கப்பட உள்ளது.

**Article — 370** திரைப்படத்தில் நடித்த **Yami Goutham-**முக்கு சிறந்த நடிகைக்கான விருதும் வழங்கப்பட உள்ளது.

தமிழ், மலையாளம், தெலுங்கு உள்ளிட்ட பல்வேறு மொழிகளில் சிறந்த திரைப்படங்களுக்கான விருதும் வழங்கப்பட உள்ளதாக அமைச்சகம் அறிவித்துள்ளது.

<<<<<>>>>>>

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், மூன்று நாள் அரசு முறைப் பயணமாக இலங்கை தலைநகர் கொழும்பு சென்றடைந்தார்.

பண்டாரநாயக்கே சர்வசேத விமான நிலையத்தில் இலங்கை பாதுகாப்புத்துறை துணை அமைச்சர் அருணா ஜெயசேகரா, இலங்கைக்கான இந்திய தூதர் திரு சந்தோஷ் ஷா உள்ளிட்டோர் அவரை வரவேற்றனர்.

சமூக வலைதளத்தில் மத்திய பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள பதிவில், இந்தியா — இலங்கை இடையேயான ராணுவ ஒத்துழைப்பு குறித்து முக்கியமாக விவாதிக்கப்பட உள்ளதாக தெரிவித்துள்ளது.

பின்னர் கொழும்பில் இந்திய வம்சாவளியினருடன் திரு ராஜ்நாத் சிங் கலந்துரையாட உள்ளதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

நாட்டில், ஆயிரத்து 86 லட்சம் ஹெக்டேர் பரப்பளவில் கரீஃப் பருவ சாகுபடி நடைபெற்று வருவதாக மத்திய வேளாண் அமைச்சகம் கூறியுள்ளது.

நெல் சாகுபடி 421 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும், பருப்பு சாகுபடி 117 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும் நடைபெற்று வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறு தானியங்கள் 181 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும், எண்ணெய் விதைகள் 191 லட்சம் ஹெக்டேர் பரப்பளவிலும் பயிரிடப்படுவதாக குறிப்பிட்டுள்ளது.

கரும்பு சாகுபடி 58 லட்சம் ஹெக்டேரில் பரப்பளவில் செய்யப்பட்டு வருவதாக அமைச்சம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>

மத்திய தொலைத்தொடர்புத்துறை மூலம் கடந்த 15 மாதங்களில் ஐந்தாயிரம் கோடி ரூபாய் இணையதள மோசடிகள் தடுக்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு மே 22-ஆம் தேதி தொடங்கப்பட்ட நிதி மோசடி தடுப்பு திட்டம் மூலம் நிதி மோசடிகளை தவிர்க்க முடிந்ததாக கூறியுள்ளது.

இந்த திட்டம் தொடங்கி, முதல் ஆறு மாதங்களில் 660 கோடி ரூபாய் நிதி மோசடி தவிர்க்கப்பட்டுள்ளதாக அரசு தெரிவித்துள்ளது.

தொலைத்தொடர்புத்துறையின் நடவடிக்கைகள் மூலம் நிதி மோசடியிலிருந்து நுகர்வோர்களை பாதுகாக்க நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாகவும் அரசு கூறியுள்ளது.

<<<<<>>>>>>

இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் எஃகு, அலுமினியம், உரம் மற்றும் சிமெண்ட் போன்ற பொருட்களுக்கு கார்பன் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வரி விலக்கு அளிக்க பிரிட்டன் முடிவு செய்துள்ளது.

இந்தியாவின் கார்பன் கடன் வர்த்தகத் திட்டத்துக்கு அங்கீகாரம் அளித்த பிரிட்டன், ஏற்கனவே இந்தியாவில் கார்பன் வரி செலுத்தப்பட்ட இந்த பொருட்களுக்கு மீண்டும் வரி செலுத்தப்பட மாட்டாது என்று கூறியுள்ளது.

இது, ஏற்றுமதியாளர்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்று இந்திய ஏற்றுமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கரியமில வாயு வெளியேற்றம் தொடர்பாக இந்திய ஏற்றுமதியாளர்களின் பொருட்களுக்கு இரட்டை வரி விதிப்பு தவிர்க்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியா இளம் தலைவர்கள் கலந்துரையாடல் போட்டிகளில் தமிழக மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் பெருமளவில் பங்கேற்க வேண்டும் என்று மை பாரத்தின் தமிழக இயக்குநர் திரு எஸ். செந்தில்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மனித மூலதனம் மற்றும் உலகளாவிய போட்டித்திறன் ஆகியவற்றை மையமாக கொண்டு இந்த நிகழ்வின் மூன்றாம் பதிப்பு நடைபெறவுள்ளதாக தெரிவித்தார்.

***(Sound Byte — செந்தில்குமார் - 50 Sec.)***

<<<<<>>>>>>

பிரதமரின் ஜன்தன் யோஜனா வங்கிக்கணக்குத் திட்டத்தில் நாடு முழுவதும் 59 கோடி மக்கள் இணைந்துள்ளனர்.

தமிழகத்தின் தூத்துக்குடி மாவட்டத்தில் 3 லட்சம் பேர் இந்த வங்கிக்கணக்குத் திட்டத்தில் இணைந்துள்ளதாக பாரத ஸ்டேட் வங்கி மேலாளர் திரு விநாயகம் மூர்த்தி, எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்.

***(Sound Byte — விநாயகம் மூர்த்தி - 48 Sec.)***

<<<<<>>>>>>

பாகிஸ்தான் அரசு சிறையில் அடைக்கப்பட்ட மனித உரிமை வழக்கறிஞர்கள் இமான் மசாரி, Hadi Ali ஆகியோரை உடனடியாக விடுவிக்க வேண்டும் என்று சர்வதேச பொது மன்னிப்பு அமைப்பு வலியுறுத்தியுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் Shehdaz Sharif -வுக்கு இந்த அமைப்பு அனுப்பியுள்ள கடித த்தில், கடந்த ஜனவரி 23-ஆம் தேதி கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்ட இந்த வழக்கறிஞர்களை, இதுவரை விடுவிக்கவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தான் நீதிமன்றம் ஜாமீன் வழங்கிய பின்னரும் இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டிருப்பதை இந்த அமைப்பு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

<<<<<>>>>>>

வியட்நாம் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Rounak Chouhan இரண்டாவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-15, 21-11 என்ற செட் கணக்கில், சக நாட்டு வீரர் Pranay Shettigar-ஐ வென்றார்.

-----------------

சென்னையில் நடைபெற்றுவரும் துலிப் கோப்பை கிரிக்கெட் இறுதிப்போட்டியின் மூன்றாவது நாள் ஆட்டநேர இறுதியில் கிழக்கு மண்டல அணிக்கு எதிராக பேட் செய்துவரும் தெற்கு மண்டல அணி 6 விக்கெட் இழப்பிற்கு 242 ரன் எடுத்துள்ளது.

முன்னதாக, கிழக்கு மண்டல அணி முதல் இன்னிங்சில் 708 ரன்னுக்கு ஆட்டமிழந்தது.

-----------

தாய்லாந்து சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Maan Kesharwani** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-1** என்ற செட் கணக்கில், தாய்லாந்தின் **Penn Charusorn**-ஐ வென்றார்.

----------

இந்தோனேஷியா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Digvijayapratap Singh** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-3, 6-2** என்ற செட் கணக்கில், ஆஸ்திரேலியாவின் **Ashwin Ryan Sharma**-வை வென்றார்.

மற்றொரு போட்டியில், இந்தியாவின் **Arjun Rathi**-யும் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **5-7, 6-2, 6-2** என்ற செட் கணக்கில், அமெரிக்காவின் **Stefan Menichella**-வை வென்றார்.

--------------

சீன சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Vaishnavi Adkar** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், **6-2, 6-0** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Kayo Nishimuru**-வை வென்றார்.

**<<<<<END>>>>>>**